9th March 1959]

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Two petitions, dated 16th August and 8th September 1958 respectively were received.

(*b*) A report has been called for from the Inspector of Municipal Councils and Local Boards.

Deputy Sevaks

* 659-J *Q.*—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் ஸ்ரீ நவம்பர் மீ 22-உ-ல் நடைபெற்ற **Madras State Harijan Welfare Committee**-யில் நிறைவேற்றப்பட்ட 1-வது தீர்மானத்தின்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் எந்தெந்த தாலூகாகளிலே **Deputy Sevaks** நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் ?

(ஆ) இவர்களைத் தெரிந்தெடுத்து நியமனம் செய்ய யார்யாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

(இ) Deputy Sevaks செலக்ஷனிலே என்னென்ன யோக்கியதாம்சங்கள் கவனிக்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Deputy Sevaks have been appointed at the rate of one for each taluk except in Madras district.

(*b*) The appointing authority is the Director of Harijan Welfare. The Director prepares and submits to Government a list of candidates suitable for appointment for final selection and appoints the persons so selected by the Government.

(*c*) The qualifications prescribed for selection of Deputy Sevaks are that the applicants should have completed S.S.L.C. or any other examination equivalent thereto and should be good speakers in Tamil. Preference is given to those who have done service to the cause of the removal of untouchability. The age should be between 25 and 30 years and in the case of candidates belonging to Scheduled Castes or Scheduled Tribes, the upper age-limit is 35 years. In special cases, the age-rule is relaxed.

SRI P. G. MANICKAM : இவ்வாறு நியமிக்கப்படும் டெபுடி சேவக்குகள் மூலம் தீண்டாமையை ஒழிப்பதுடன் ஹரிஜன முன்னேற்றத்திற்குரிய விஷயங்களையும் அடங்கிய ஒரு ஜாப்தாவானது தயாரிக்கப்பட்டு அங்கங்கே நடைபெறும் பல ஹரிஜன இலாகா சமிட்டியின் முன் சமர்ப்பிப்பதைப் பற்றி இந்த சர்க்கார் கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : டெபுடி சேவக்குகள் எவ்வாறு வேலை செய்வது என்பதைப்பற்றி எடுத்துச் சொல்வதற்கு அவர்களுக்கு பயிற்சி முகாம் அமைத்து நல்ல முறையில் மக்களுக்கு சேவை செய்வதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அதற்குத் தக்கபடியும் ஏற்பாடு செய்யப்படும்.

SRI A. GOVINDASAMI : இந்த உத்தியோகங்களுக்கு தொண்டர்களை எடுக்கும் பொறுப்பை ஏன் சர்வீஸ் கமிஷனுக்கு விடக்கூடாது?

THE HON. SRI P. KAKKAN : இது தனியானது, தீண்டாமை ஒழிப்பக்கு என்று தனியாக பயிற்சி கொடுக்கப்படும். அப்படிப்பட்ட பயிற்சியை மேற்கொண்டு மக்களுக்கு சேவை செய்யவேண்டியதாக இருக்கிறது. அதன் மூலம் தீண்டாமையை போக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் தான் சர்வீஸ் கமிஷனுக்கு விடவில்லை.

[9th March 1959

Sri M. K. SOMASUNDARAM : இப்படி நியமிக்கப்பட்டிருக்கிற டெபுடி சேவக்குகள் பத்தாவது படிக்கவேண்டுமென்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால் பத்தாவது படித்திருக்கிறவர்களை நியமிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

The Hon. Sri P. KAKKAN : நான் முதலில் படித்த பதிலை கனம் அங்கத்தினர் நன்றாக கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். பத்தாவது படித்திருக்க வேண்டும், ஹரிஜன சேவையில் ஈடுபட்டிருக்க வேண்டும். அல்லாவிட்டால் அவர்கள் தியாகிகளாக இருக்கவேண்டும். இப்படி இருந்தால்தான் அப்படி நியமிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. அதனால் பத்தாவது மட்டும் படித்திருக்க வேண்டுமென்பது இல்லை. ஒவ்வொரு க்வாலிபிகேஷனையும் வைத்துத்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

Sri M. JAGANNATHAN : இந்த டெபுடி சேவக்குகள் அதிகமாக பிரசாரம் செய்கிறார்களே தவிர தீண்டாமை ஒழிப்புக்கு வேலை செய்வதாக இல்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

The Hon. Sri P. KAKKAN : இந்த டெபுடி சேவக்குகள் அரசாங்கம் செய்யக்கூடிய வேலையாகிய தீண்டாமை ஒழிப்பைப்பற்றி பிரசாரம் செய்வதால் அது அரசாங்கத்திற்காக பிரசாரம் செய்வதாகக் கருதப்படுகிறது போல் தோன்றுகிறது என்று நினைக்கிறேன்.

Sri P. G. MANICKAM : தேச விடுதலை போராட்டத்தில் பங்குகொண்ட அரசியல் தியாகிகள் இதற்கு லாயக்குள்ளவர்களாக இருந்தால் அவர்கள் அப்ளிகேஷன் போட்டால் அவர்களை எடுத்துக்கொள்ள சர்க்கார் கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri P. KAKKAN : அப்படிப்பட்ட அநேகம்பேர்களையும் நாங்கள் எடுத்திருக்கிறோம்.

Sri K. VINAYAKAM : தீண்டாமையை ஒழிக்க ஹரிஜன முன்னேற்றத்தில் அக்கரை கொள்ள வேண்டும். அப்படி அவர்களை நியமிக்கும்போது டெபுடி சேவக்குகள் ஹரிஜனங்கள் வாழ்கிற இடங்களில் வேலை செய்ய வேண்டும். அதனால் ஹரிஜனங்களை மட்டும் நியமிக்காமல் மற்றவர்களையும், ஜாதி ஹிந்துக்களையும் நியமிப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

The Hon. Sri P. KAKKAN : ஹரிஜனங்களுக்கு கொஞ்சம் கொடுக்க வேண்டும், மற்ற ஜாதி ஹிந்துக்களுக்கும் கொஞ்சம் இடம் கொடுக்க வேண்டும். ஆகவே இவைகளுக்கு நியமிக்கும்போது எல்லோருக்கும் கிடைக்கும்படியாகத்தான் நியமிக்கவேண்டும். ஹரிஜனங்களை மட்டும் நியமிப்பது என்பது சரியல்ல.

Executive Officer of Tambaram Panchayat

* 659-K *Q*.—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Inspector of Municipal Councils and Local Boards has received a complaint, dated 1st September 1958, against the Executive Officer of Tambaram Panchayat; and

(*b*) if so, what is the nature of the complaint and the action taken thereon?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : (*a*) Yes, Sir.

(*b*) It was alleged that the Executive Officer was not co-operating with the Vice-President of the Panchayat. On enquiry, the allegation was found to be baseless.

ALONE TRIUMPHS